கலயாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 03 சனிக்கிழமை (18 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 22

# உன்னத அர்ப்பணிப்புகளின் பயனாகவே
# போரில் பெரு வெற்றிகளை ஈட்ட முடிகிறது



தாக்குதல் நடவடிக்கையில் வீரச்சாதனை புரிந்த அழகனுக்கு (விசுவுக்கு) தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பரிசு வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஒ)

## பூநகரிச் சமரில் வெல்வதற்கு வேவுப்பிரிவின் சாதனை காரணம்

### போராளிகளுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் தலைவர்

யாழ்ப்பாணம், டிசம்பர் 18

வேவுப் பிரிவினைச் சேர்ந்த போராளிகளின் உன்னதமான அர்ப்பணிப்புகளின் பயனாகவே விடுதலைப் போரில் நாம் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ள முடிகிறது. அந்தப் பிரிவைச் சேர்ந்த போராளிகளின் துணிகரச் சாதனைகள் மூலமே நாம் பூநகரிப் பெரும் சமரில் வெற்றியீட்ட முடிந்தது.

— இவ்வாறு தெரிவித்தார் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

போர் முனையில் வீரச் சாதனைகள் ஈட்டிய போராளிகளுக்குப் பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவித்துப் பேசும் போதே தலைவர் இப்படிக் கூறினார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த கௌரவிப்பு வைபவம் நடைபெற்றது. பல்வேறு இராணுவ நடவடிக்கைகளில் வீரச்சாதனை புரிந்த பதினேழு போராளிகளுக்குத் தலைவர் பரிசில்களை வழங்கினார்.

பரிசளிப்பு வைபவத்தில் பேசும் போது தலைவர் தெரிவித்ததாவது:-

எமது ஆயுதப் போராட்ட வடிவம் இன்று என்றுமில்லாதவாறு பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. கெரில்லாப் போர் முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த நாம், இன்று பெரிய அளவில் பாரிய படைத் தளங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்த அபாரமான வளர்ச்சிக்கு வேவுப் பிரிவினர் பங்கு முக்கியமானது.

வேவுப் பிரிவினர் பெற்றுத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரிடம் பரிசில் பெற்றோர்

வீரச் சாதனைகள் புரிந்த பதினேழு போராளிகளுக்கு தலைவர் வே. பிரபாகரன் நேற்று முன்தினம் பரிசில்கள் வழங்கி பாராட்டிக் கௌரவித்தார்.

தலைவரிடம் பரிசில் பெற்ற 17 போராளிகளினதும் விவரம் வருமாறு:-

★ அழகன் அல்லது விசு
★ சேரன்
★ வெற்றிச் செல்வன் அல்லது விக்டர்.
★ பூங்குன்றன் அல்லது மயூரன்.
★ இனியவன் அல்லது ரமேஷ்.
★ முகிலன்.
★ செம்மனத்தான் அல்லது குணாளன்.
★ வீரப்பன் அல்லது தயா
★ அருளி.
★ பேரம்பலம் அல்லது ஹீரோ.
★ இளங்கோ.
★ மணிமாறன் அல்லது சிலன்.
★ திருவருள் அல்லது எமர்ஸன்.
★ குமரன்.
★ மலையப்பன் அல்லது ஈசன்.
★ சுதாகர் அல்லது மூவேந்தன்.
★ சுதாகரன்.

(ஒ-3)

## ஐ.தே.க.வில் மீண்டும் றொனி

கொழும்பு, டிச 18

முன்னாள் நிதி அமைச்சரான திரு. றொனி டி மெல் ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று முன்தினம் சேர்ந்து கொண்டார்.

ஜனாதிபதி விஜேதுங்காவை நேற்று முன்தினம் இரவு றொனி டி மெல் சந்தித்து, கட்சி உறுப்பினர் விண்ணப்பத்தை கையளித்தார். அப்போது அமைச்சர் சிறிசேன குரே கூடவிருந்தார். (ஒ-எ)

### செயலகத்திற்கு கட்டடப் பொருள்கள்

## ரணிலின் பணிப்பை அடுத்தே அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், டிச. 18

குண்டுவீச்சால் சேதமடைந்த யாழ். செயலகத்தை திருத்த தேவையான கட்டடப் பொருள்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்ததாகவும் —

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையை அடுத்தே பொருள்கள் எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததாகவும் —

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

8 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் மற்றும் சிமெந்து, சீற் வகைகள் போன்றவை 'ருகுணு' கப்பல் மூலம் எடுத்து வரப்படுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார் (ஒ-3)

## சிதைந்த செயலக படங்கள் பிரமுகர்களுக்கு விநியோகம்

### யாழ். அரச அதிபர் வழங்கினார்

யாழ்ப்பாணம், டிச. 18

குண்டுவீச்சால் சிதைந்துபோன செயலகத்தின் புகைப் படங்களை அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்தார்.

செயலகத்தின் படங்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, மற்றும் அரச உயர் பிரமுகர்கள் பலருக்கும், வெளிநாட்டு தூதுவர்களுக்கும் வழங்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-3)

## 'காவிய நாயகன் கிட்டு' நெடுமாறன் எழுதிய புத்தகம்

சென்னை, டிச. 18

''காவியநாயகன் கிட்டு'' என்ற தலைப்பில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் அடிப்படை என்ற பெயரில் நெடுமாறன் இன்னொரு புத்தகத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

இப்புத்தகங்களை வெளியிட்டது தொடர்பாக திரு. நெடுமாறன் சென்னை நீதிமன்றத்தில் முன் பிணை அனுமதி பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## அடுத்த தேர்தலில் சு. க. தனித்துப் போட்டியிடாது

கொழும்பு, டிச. 18

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நடாளுமன்றத் தேர்தல்களில் சுதந்திரக்கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கொடியின் கீழ் அதன் சின்னத்தில் போட்டியிடும். சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடாது.

இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியுமான

(4ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சுமாரான பெறுபேறுகள்

### பொஸ்கோ முன்னணியில்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின. இம்முறை பரீட்சைப் பெறுபேறுகள் சுமாராக அமைந்திருந்த போதிலும் மாணவர்களின் வினைத்திறன் வீழ்ச்சி கண்டிருப்பதாக கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை ஜி சீ.ஈ உயர்தர பரீட்சை பெறுபேறுகளும் வீழ்ச்சி அடைந்திருந்தன.

விமான மூலம் நேற்று இங்கு வந்துசேர்ந்த அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பெறுபேறுகளைக் கொண்டு வந்திருந்தார்.

பரீட்சை முடிவுகளின்படி, தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவர்களில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை மாணவன் செல்வன் பிரகாஷ் 190 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றார்.

இப்பரீட்சையில் சித்தி அடைவதற்கான வெட்டுப் புள்ளி 136 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு துளைக்காத கார்கள்; டி. பி., ரணில் புறக்கணிப்பு!

கொழும்பு, டிச. 18

தங்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்ட குண்டு துளைக்காத பென்ஸ் கார்களை தங்களுக்கு வேண்டாம் என்று ஜனாதிபதி விஜேதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கூறிவிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் அலுவலக வளவுகளில் தரித்து நிற்கும் இப் பென்ஸ் கார்களை ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்த இரண்டு குண்டு துளைக்காத பென்ஸ் கார்களும் முப்பது கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து 'ரிமோட் கொன்ட்ரோல்' முறையில் இயக்கக் கூடியதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்று 'த ஐலண்ட்' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனிடையில் — ''பிரேமதாஸா அரசின் கீழ் இந்த இரண்டு கார்களும் யாருடைய உத்தரவின் மீது இறக்குமதி செய்யப்பட்டன? இவற்றின் விலை என்ன? சுங்கத் தீர்வை செலுத்தப்பட்டதா? எந்த அமைச்சினால் இதற்கு பணம் வழங்கப்பட்டது?'' — என்ற கேள்விகளை மக்கள் ஐக்கியமுன்னணி எம். பி பந்துல குணவர்த்தனா நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் கேட்டிருந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இக்கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சரும் நிதிராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் தெரிவித்திருந்தார்.

யார் இந்தக் கார்களை இறக்குமதி செய்ய உத்தரவிட்டார் என்பதை கூறமுடியாதபடி தடுக்கும் பாதுகாப்புக் காரணங்கள் எவை என்று 'த ஐலண்ட்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கேட்டுள்ளது

இக் கார்கள் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் மீதுதான் இறக்குமதி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (த-எ)

### மூச்சந்தி முனி



குண்டு துளைக்காத கார்களுக்குப் பதிலாய் குண்டுகளை வாங்கலாம் எண்டு நினைச்சிட்டினம் போலை...!

### இராணுவ அதிகாரிகளினால் சித்திரவதை

## தமிழ் அகதியின் முறைப்பாடு; உயர் நீதிமன்றம் ஏற்றது!

கொழும்பு, டிச. 18

இராணுவ அதிகாரிகள் சிலரால் தாம் சித்திரவதை செய்யப்பட்டதாக 23 வயதான தமிழ் அகதி ஒருவர் செய்த முறைப்பாட்டை [illegible] மன்றம் ஏற்றுக் கொண்டதுடன் —

முறைப்பாட்டுக் காரருக்கு மூவாயிரம் ரூபா நட்டஈடு வழங்கும்படி அரசுக்கும் உத்தரவிட்டது.

இந்த அடிப்படை உரிமை [illegible] அவது [illegible] [illegible]

ஷெல் சேலேஷியஸ் குறூஸ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில், கட்டைப் பறிச்சான் இராணுவ முகாமின் கொமாண்டன்ற், மூதூர் ஜி. பி. எஸ். இராணுவ முகா

( 3ஆம் பக்கம் பார்க்க)

## உயர்கல்வி அமைச்சராக அனுரா பதவிப் பிரமாணம்

கொழும்பு, டிச. 18

அனுரா பண்டாரநாயக்கா உயர்கல்வி அமைச்சராக ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் நேற்றுக் காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து உயர்கல்வி ராஜாங்க அமைச்சராக இருந்து வந்த திரு. திஸ்ஸ அத்தநாயக்கா பல்கலைக்கழக விவகார கருத்திட்ட அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

இதுவரை கல்வி, உயர்கல்வி, கலாசாரத்துறை அமைச்சராகப் பணிபுரிந்து வந்த டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டார கல்வி மற்றும் கலாசாரத்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்தார்.

திருமதி சுனீத்ரா ரணசிங்க கல்விச் சேவைகள் அமைச்சராகவும் — திருமதி ராஜமனோகரி புலேந்திரன் கல்வி ராஜாங்க அமைச்சராகவும் தொடர்ந்து பணிபுரிவார்கள்.

## எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்!

### மாகாண சபை அனுப்பியுள்ளது

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். மாவட்டத்தில் அரச அதிபரால் நடத்தப்பட்ட எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவாகி மாகாணசபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் கடமையாற்றுபவர்களுக்கான நிரந்தரமாக்கும் கடிதங்கள் மாகாணசபையால் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தப் போட்டிப் பரீட்சையில தோற்றி மத்திய அரசு திணைக்களங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களை நிரந்தரமாக்குவதற்கு அந்தந்த திணைக்களங்களே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை — இந்த வருடத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றிய — மத்திய அரசு திணைக்களங்களுக்கான எழுதுவினைஞர் மற்றும் இணைந்த சேவையாளர்களுக்கான பட்டியல் கொழும்புக்கு விரைவில் அனுப்பப்படும் என்றும் —

அவர்கள் ஏனைய மாவட்டங்களின் திணைக்களங்களுக்கு நியமிக்கப்படுவர் என்றும் — அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## புதிய தளபதியாக ஜெரி டி சில்வா!

கொழும்பு, டிச. 18

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா (53 வயது) நியமிக்கப்பட்டுள்ளார் என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் லெப்டினன்ட் ஜெனரலாக இவர் பதவி உயர்வு பெறுவார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இவரை நியமித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் நேற்று லங்காபுவத்திடம் தெரிவித்தார்.

1960 ஆம் ஆண்டு மே மாதம் இராணுவத்தில் சேர்ந்த இவர், பிரிட்டனில் உள்ள சாண்ட்ஹேர்ஸ்ட் றோயல் இராணுவக் கல்லூரியில் ஆரம்பகால இராணுவ பயிற்சியைப் பெற்றார்.

பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலும் இவர் பயிற்சி பெற்றுள்ளார்.

இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கை நெறியில் இவர் முதுமாணி பட்டம் பெற்றவர்.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா வடக்கிலும், கிழக்கிலும் தளபதியாகக் கடமையாற்றியுள்ளார்.

(ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 மாத பேட்டுக்கோழிக் குஞ்சும், விறாத்து சேவலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 9, கந்தையா வீதி, சுன்னாகம். (6746)

45 நாட்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட அல்சேஷன் நாய் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு. க. நடராசா, பலாலி றோட், புலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (28481)

யமுனா பாறி (Jamna Pari) பால் ஆடும் கடாக்குட்டியும், அயர்சர் (Ayshire) கலப்பின கன்னி மாடும் விற்பனைக்குண்டு. எஸ். ரி. வரதராஜன், இலுப்பையடிப் பிள்ளையார் கோயில் ஒழுங்கை (கோப்பாய் காவல் துறைக்கு அருகில்), கோப்பாய் வடக்கு, கோப்பாய். (6858)

பாவித்த நல்ல நிலையிலுள்ள நஷனல் பனசொனிக் றேடியோ 4 Band மொடல் 4960, J. V. C. கலர் T. V. 14'', நஷனல் பனசொனிக் டெக்செற் 2 Box Two in One, விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28467)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் கோழி முட்டைகள், வான்கோழி முட்டைகள், எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28411)

2½ அந். நிறுக்கக்கூடிய அமெரிக்கன் (இறாத்தல்) மேடை தராசு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. முத்துசாமி, 47, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28463)

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6ஆவது மைல் கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (28446)

## கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா – லோமன் ஐந்து நாட்கள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் ஓடர்களுக்கு புறொயிலர், வெள்ளை பேட்டுக்குஞ்சு, சேவல் கோல்டன் கொமட் பேட்டுக்குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28465)

## உடன் விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த ஹங்கேரியன் பிராமா, போலிஸ், சில்கி, பாபடிக்கல்ஸ், சாப்பிலி பன்ரம், சிலம்பு பன்ரம், யாவா பன்ரம் முட்டைகளும் 15 நாட்கள் நிரம்பிய ஹங்கேரியன் பிராமா, போலிஸ் இன கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (28490)

## மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6810)

## கதிரம்

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றப் பத்திரத்தை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள் சோதி புத்தகசாலை, கசசாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி (சி 6718)

## கைதடியில் அரிய வசதி

பயிருக்கு ஊட்டம் அளிக்கக் கூட்டெருவாம் சக்தி இயற்கைப் பசளை, சிறந்த அடிக்கட்டு உரமாகவும், பீடைகளைக் கட்டுப்படுத்தவும் நீமியா உரம், பயிரில் துரிதமாகப் பரவும் பூச்சிக் கொல்லி ''மார்க்கோசின்'' கமக்காரருக்கு கைதடியில் கிறைண்டிங் மில், உரவிற்பனை நிலையத்திலும் கிடைக்கும் ''மில்க்வைற்'' (சி-6717)

## தேவை

சகல விதமான மணிக்கூடுகள் திருத்துநர்கள் உடன் தேவை. நல்ல சம்பளம் தரப்படும். தொடர்பு: ரதி வாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ், இல. 62, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6856)

## பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (PVT) Ltd. 14, Scenier Lane, Jaffna. (28373)

## மணமகள் தேவை

நல்லொழுக்கம், குடிப்பழக்கமற்ற, 43 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. உத்தியோகம் வகிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 580, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28460)

## இந்தியா ருடே

இலங்கை ஏஜன்டான P. S. சுந்தரம் அன் சன்ஸ் அவர்கள் தமிழீழத்தில் ஏஜன்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6696)

## கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர் சகல விதமான டயறி வகைகள், கிறிஸ்மஸ் கார்ட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6698)

## ஆண்டு 5 அனுமதி

1994 ஆம் ஆண்டிற்கான ஆண்டு 5க்குரிய அனுமதிப் பரீட்சையுடன் புதிய பிரிவு ஆரம்பம் 19-12-93 விவரங்களுக்கு; உதயன் அக்கடமி, பருத்தித்துறை வீதி, (யாழ். மாநகரசபை முன்பாக) நல்லூர். (28474)

## தவறிவிட்டது

67672087 IV இலக்கமுடைய அடையாள அட்டை 11-12-93 அன்று இருபாலைக்கும், கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். செல்வி ஆழ்வாப்பிள்ளை பவானி, ''பவானி இல்லம்'', துன்னாலை தெற்கு, கரவெட்டி. (நெல்லியடி) (28456)

## யாருடையது

கிரிச்சோலை லேனுக்கும், டச்றோட் இரஞ்சன் கடைக்கும் இடையில் தங்கத்தினாலான பொருள் ஒன்றை கண்டெடுத்துள்ளேன். உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்: ஜெயசக்தி பார்மஸி, மருதனார் மடம். (6745)

## ICING CLASSES

Wilton Sugar Flowers, Fondant Icing Structures வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் 24-12-93க்கு முதல் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28486)

## MAKE UP CLASSES

Basic Make up and Modern Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, Nayanmar Veethy Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28187)

## வகுப்பு

ஜேர்மன் வளாகங்களிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் படிக்க விரும்பும் மாணவர்கள் ஜேர்மன் மொழி (Deutsch) பயிலவும் விலாசங்கள் பெறவும் தொடர்பு கொள்க. S சொர்ணலிங்கம், 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் – காங்கேசன்துறை வீதி அருகில்) (28468)

## எமது புதிய வெளியீடுகள்

சத்தியராஜ் — கௌதமி

**ஏர்போர்ட்**

அர்ஜுன் — குஷ்பு

**ரோஜாவை கிள்ளாதே**

கார்த்திக் — குஷ்பு

**காத்திருக்க நேரமில்லை**

''கோகுலம்'' புகழ் ஜெயராம் — குஷ்பு

**புருஷ லட்சணம்**

**வீடியோ விமல்**

117 மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.

குறிப்பு: குறித்த படங்கள் தணிக்கைக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னரே விநியோகிக்கப்படும். (28489)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி சி. புவனசுந்தரி**

அன்னை மடியில்: **1936 - 07 - 23**
ஆண்டவன் அடியில்: **1992 - 12 - 29**

நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே! ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறிடுமோ எம் துயரம். மீண்டு வரும் நினைவலையால் உருகியழும் எம்முள்ளம் எந்நாளும் உங்களையே எண்ணுமம்மா. தங்கள் ஆசியும் அறிவுரையும் எம்மை வழி நடத்துமம்மா.

உங்கள் இழப்பால் துயருறும்,
பிள்ளைகள், மருமகன்,
பேர்த்தி, சகோதர, சகோதரிகள்.

''தங்கஸ்தான்'',
இருபாலை. (28443)

## எஸ்-லோன் பைப்புகள்

குழாய் கிணறுகளுக்கும் கைப்பம்புகளுக்கும் உரிய எஸ்-லோன் பைப்புகள் விற்பனைக்கு உண்டு.

**''நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்''**

141, 143, அர்ச்சுனா வீதி
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம். (28492)

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் முன்னாள் அதிபர்

**உயர்திரு. க. கயிலாயநாதன்**

அவர்கள்


இறைபதமடைந்த செய்தியறிந்து ஆறாத்துயரடைகிறோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

மெமோறியல் கல்லூரி,
மானிப்பாய். (28495)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 04 — 09 — 1924



உதிர்வு: 22 — 11 — 1993

**திருமதி பூபதி இராமலிங்கம்**

அந்தியேட்டி: 22 — 12 — 1993

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் எமது உயர் வாழ்விற்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எங்கள் குல தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

முள்ளியவளை-4. (6859)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்பும் பண்பும் அருளுமுடைய ஆசிரியை

**திருமதி சதாசிவரத்தினம் ஞானமணி**

மண்ணில்: **1928 — 09 — 06**
விண்ணில்: **1992 — 12 — 28**

திதி: 18 - 12 - 1993

திதி நிர்ணய வெண்பா:

ஆங்கிரச மார்கழித் திங்கள் அவிட்டம் சேர்
ஓங்கு முழுமதி நாடிய பஞ்சமி திதியில்
சுன்னைநகர்
பாங்குமிகு சதாசிவரத்தினம் நற்றுணைவி ஞானமணி
தூங்கு செவி தோடுகூடத் தொன்மையிறை
தாள் சேர்ந்த நாள்.

கணவன், தம்பிமார்,
தங்கை, மருமக்கள்,
பெறாமக்கள், சுற்றத்தார்.

60/17, Dr. சுப்பிரமணியம் வீதி,
[illegible] (6749)

## மலிவு விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டும், திருமணம், பிறந்தநாள் மற்றும் வைபவங்களுக்கும் **20-12-1993** முதல் **05 — 01 — 1994** வரை மலிவு விற்பனை நடைபெறும்.

| | | சாதாரண விலை | | மலிவு விலை |
|---|---|---|---|---|
| மஸ்கட் | 1 Kg. | 180/- | — | 150/- |
| றிச் கேக் | " | 350/- | — | 300/- |
| பட்டர் கேக் | " | 180/- | — | 150/- |
| பூசணி அலுவா | " | 140/- | — | 120/- |
| இனிப்புப் பூந்தி | " | 130/- | — | 120/- |
| சீனிக் காரா | " | 135/- | — | 120/- |
| உறைப்புக் காரா | " | 130-/ | — | 120/- |
| மிக்ஸர் | " | 200/- | — | 150/- |

மற்றும் பகோடா, லட்டு, தேன் குழல், பயத்தம் உருண்டை, ஹஜா, போளி, றோல்ஸ், பற்றிஸ், கட்லற் முதலியனவைகளும் மலிவு விற்பனைக்கு கொடுக்கப்படும். இவையாவும் ஓடருக்கு (ORDER) குறித்த நேரத்தில் தரமாகவும், சுவையாகவும் நிதான விலைக்கு வாங்கிக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்:

**றெனோ சுவீற் ஹவுஸ்**

45/1, டேவிற் வீதி (லேன்),
யாழ்ப்பாணம். (6855)

## 30ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: **15 — 12 — 1910**

சிவனடிப்பேறு: **19 — 11 — 1993**

மறவன்புலோவாசரும், சைவத் திருவாளரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலை முன்னாள் அதிபரும், ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை, முகாமையாளருமாய் விளங்கிய

**அமரர் மு. கணபதிப்பிள்ளை**

அவர்கள் ச. நீ

அறவழி நாட்டம் அன்புசே ருள்ளம்
அயராதே உழைத்திடும் பாங்கு
திறமையிற் பொறுமை செய்தொழில் நேர்த்தி
தெய்வநற் பக்தியில் திளைத்தல்
குறைபிறர் மீது கூறிடாக் கொள்கை
கொண்ட எம் கணபதிப் பிள்ளை
மறவனின் புலோவில் வாழ்ந்தவர் இறைதான்
மருவினர் அவர்புகழ் வாழி

நண்பர்களும், உறவினர்களும்

மறவன்புலோ,
கைதடி, நாவற்குளி. (28498)

## ஓராண்டு நினைவலைகள்

**அமரர் ஞானப்பிரகாசம் றெக்ஸ்**

(மெக்கானிக் நவம்)

அன்னை மடியில்: **06 — 01 — 1952**
இறைவனடியில்: **18 — 12 — 1992**

அன்பு மகனே!
வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேன்—ஆனால்
இலவு காத்த கிளிபோல் ஆகிவிட்டதையா உன் கதை
வேலைக்குச் சென்ற நீ வருவாய்—எனக்
காத்திருந்த உன் மனைவி
உயிரற்ற உன் உடலைக் கண்டவள்
சோர்வுற்றாள், கலங்கினாள், நிலை குலைந்தாள்
சோறூட்ட அன்புத் தந்தை நீ — வருவாய்
எனக் காத்திருந்த உன் பிள்ளைகள் ஏமாறினர்
நட்பிலோர் நாயகனாய்
நற்குணத்திலோர் உத்தமசீலனாய்
காலனவன் உன்னைக் கவர்ந்திடக்
காரணம் என்ன றெக்ஸையா?
உன் வாயினில் தவழ்ந்திடும் புன்சிரிப்பால்—எமை
நண்பராக்கிய நீ பாதியில்—எமை
கதறியழ விட்டுவிட்டுச் சாவை நீ
அணைத்தது ஏனையா? நீ
எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உம் நிழல் எம்மைத் தொடருதையா!

நின் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உற்றார்
உறவினர், நண்பர்கள்.

58, புதிய வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம். [28482)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## உலகம் புரியாதவர்

சோவியத் யூனியனின் வீழ்ச்சியை அடுத்து, வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி முடிவுக்கு வந்தபின்னர், உலக அரங்கில் இருந்துவந்த பிரச்சினைகள் பல தீர்க்கப்பட்டு விட்டன. மற்றும் சிலவற்றை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

45 வருட காலமாக உலகைத் தொடர்ந்து யுத்த நெருக்கடிக்குள் வைத்துக் கொண்டிருந்த மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக கடந்த செப்டெம்பரில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பரமவைரிகளாகக் கருதப்பட்டுவந்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தும், இஸ்ரேல் பிரதமர் ரபீனும் நியூயோர்க்கில் கைகுலுக்கி சரித்திரம் படைத்துள்ளனர்.

இதேபோன்று தென் ஆபிரிக்காவில் வெள்ளையரான ஜனாதிபதி டி. கிளேர்க்கும் கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவும்—

ஐக்கிய ராஜ்யத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும் ஐரிஷ் குடியரசுப் பிரதமர் அல்பேர்ட் ரெனோல்ட்டும்—ஒப்பந்தங்களைச் செய்து வரலாற்று நாயகர்களாக மாறியுள்ளனர்.

சமீப காலத்தில் ஏற்பட்ட பொஸ்னியா, சோமாலியாப் பிரச்சினைகளையும் மற்றும் அங்கோலாப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது உலக தலைநகரங்களில் நடைபெற்று வருகின்றன. ஆனால் உருப்படியான முடிவு எதுவும் இல்லை.

உலகில் தற்போது தீர்க்கப்படாத பிரச்சினைகளில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான காஷ்மீர் பிரச்சினையும் ஒன்று. மற்றது இலங்கை இனப்பிரச்சினை.

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சி வென்றதை அடுத்து காஷ்மீர் பிரச்சினையில் தீர்வுக்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சினையை இந்திய மாநிலங்களில் உள்ளது போன்று சாதாரணமான ஒரு பிரச்சினையாக கருதிவிட முடியாது.

இனப்பிரச்சினை இன்று இரு நாடுகளுக்கு இடையிலான போராக நடைபெறுகிறது.

விடுதலைப் புலிகள் பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்றுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றனர்.

அவர்கள் வடக்கு — கிழக்கில் பெரும் நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

யுத்தம் முடிவடைவதற்கான அறிகுறி எதுவுமே இல்லை. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தெளிவான நோக்கம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

மத்திய கிழக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. பலஸ்தீனர்களின் தாயகப் பிரச்சினை அது. இதில் எதுவித சந்தேகமும் இருக்கவில்லை. ஆகவே தெளிவான நோக்கத்துடன் அரபாத்தும், ரபீனும், நியூயோர்க் சமாதானப் பேச்சுக்குச் சென்றனர். அதில் வெற்றியும் கிடைத்தது.

அதேபோன்றே தென் ஆபிரிக்கா, வட அயர்லாந்துப் பிரச்சினைகளிலும் இரு தரப்பும் பிரச்சினையை அணுகிய முறை வெற்றிக்கு வழி வகுத்தது.

ஆனால் இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்கிறார் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க. இதன் மூலம் சமாதானப் பேச்சு நடத்தும் நோக்கமே அவரிடம் இல்லை என்பது புலனாகிறது.

உலகம் சமாதானத்தை நோக்கி விரைவாக நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் டி. பி. விஜேதுங்கா அழிவுப்பாதையை நோக்கிச் செல்கிறார்.

அழிவை நோக்கமாகக் கொண்ட தலைவர்கள் ஒரு போதுமே அரபாத்தின் அந்தஸ்துக்கோ, ரபீனின் அந்தஸ்துக்கோ, மண்டேலாவின் அந்தஸ்துக்கோ, டி கிளேர்க்கின் அந்தஸ்துக்கோ உயரப்போவதில்லை.

அழிவு நோக்கங்கள் உள்ளவரை அவர்களால் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் முடியாது.

# கண்டிச் சிங்களவர்களின் "இரட்சகர்" விஜேதுங்கா

## "சண்டே ரைம்ஸ்" விமர்சனம்

கொழும்பு, டிச. 18

சுதந்திரக் கட்சிக் காலத்து ஹெக்டர் கொப்பேகடுவவின் பின்னர் கண்டிச் சிங்களவர்களின் இன்றைய 'இரட்சகராக' (Messiah) ஜனாதிபதி விஜேதுங்கா பொறுப்பேற்றுள்ளார்.

சண்டே ரைம்ஸ் வார இதழ் "டி.பியின் வித்தியாசமான அடி" என்ற தலைப்பிலான விமர்சனக் கட்டுரையில் முன்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

தொண்டமானுடனான பிணக்கை "கலந்தாலோசனை, கருத்து இணக்கம், கருத்து உடன்பாடு" — என்ற வழியில் தீர்க்க விஜேதுங்கா விரும்பாது தனது பிடியில் இறுக்கி நிற்கிறார். அனுராதனது பக்கத்தில் நிற்பது தனக்கு பலமானது என்று அவர் எண்ணுகிறார்.

கண்டியர் என்ற முறையில் தமக்கு முன்னே பதவி வகித்தவர்களுக்கு இருந்ததிலும் பார்க்க தமக்கே தோட்டத் தொழிலாளரின் எதிர்ப்பு இருப்பதை விஜேதுங்கா உணருகிறார்.

தமக்கு செய்யப்பட்ட சரித்திர ரீதியான அநீதிகளைத் துடைத்தெறிய நேரம் வர வேண்டும் என்று கண்டியர்கள் அடிக்கடி உணர்ந்து வந்தனர்.

இச்சரித்திர அநீதிகளைகளையும் ஒரு நடவடிக்கையாக 1970 — 77 இல் கண்டியன் என்ற முறையில் அப்போது காணி அமைச்சராக இருந்த ஹெக்டர் கொப்பேகடுவ காணிச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இன்று அந்தப் பணியை ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்துக் கொண்டுள்ளார்.

கொப்பேகடுவவுடன் சேர்ந்து காணிச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர உதவிய அப்போதைய பிரதமர் சிறிமா, டி. எம். ஜயரத்னா, சந்திரிகா ஆகியோருடன் சேர்ந்து கொள்ள தொண்டமான் இப்போது தள்ளப்பட்டுள்ளார்.

இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## வடக்கு - கிழக்கு போன்று

# மலையகத்திலும் பிரச்சினை; நாம் உருவாக்கிவிட கூடாது!

## சு க. எம்.பி சொல்கிறார்

வடக்கு - கிழக்கில் இன்று நிலவும் நெருக்கடி நிலையை மலையகத்தில் நாம் உருவாக்கி விடக்கூடாது.

கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. லஷ்மன் கிரியெல்லா நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

மலையகத்தில் இன்று அமைதியின்மை நிலவுகின்றது. தோட்டத் தொழிலாளரின் பிரச்சினைகளைப் பேச்சுகள் மூலமே தீர்க்க வேண்டும்.

அரசாங்கத்தை விட்டு தொண்டமான் வெளியேறப் போகின்றார் என்பதற்காக அவரைக் கண்டிக்கிறீர்கள்.

தொண்டமானுடன் ஜெயவர்த்தனா அமைச்சரவையில் பத்து ஆண்டுகளாக இருந்த காமினி ஜெயசூரியா இன்று சிங்கள இனம் பற்றிப் பேசுகிறார். அமைச்சராக இருந்த போது சிங்கள இனம் பற்றிய சிந்தனை காமினி ஜெயசூரியாவுக்கு ஏற்படவில்லையா? தோட்டத் தொழிலாளர்களை நாம் புறக்கணித்து விடமுடியாது.

—இவ்வாறு அவர் தெரிவித்தார். (த-எ)

# இலவச சீருடை விநியோகம் கல்வி அலுவலகத்திடமே

யாழ்ப்பாணம், டிச 18

யாழ். கல்வி அலுவலகம் இரண்டு வலயமாகப் பிரிக்கப்பட்டபோதும் மாணவர்களுக்கான இலவச சீருடை, பாடப் புத்தக விநியோகம் ஆகியவற்றை கல்வி அலுவலகமே மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 14 பிரதேச கல்வி அலுவலகங்களிருந்து சீருடை, பாடப்புத்தகம் பெறுவோரின் எண்ணிக்கை கோரப்பட்டிருந்தது.

சில கல்வி அலுவலகங்களின் விவரங்கள் மத்திய கல்வி அமைச்சுக்கு கிடைக்கவில்லை.

அதனால் மத்திய கல்வி அமைச்சு கல்வி அலுவலகத்திடம் பூரண விவரங்களை கேட்டுள்ளது.

இவ்விவரங்களை பிரதேச கல்வி அலுவலகங்களில் பெற்று கொழும்பில் இருந்து அவற்றை மொத்தமாக எடுத்து வந்து பிரதேச அலுவலகங்கள் மூலம் பாடசாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-3-17)

# ஈரற்பெரிய குளத்தில் 2 லொறிகள் தடுத்துவைப்பு

## தடை செய்த பொருள்கள் இருந்தனவாம்

யாழ்பாணம், டிச. 18

வடபகுதிக்குதடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வந்த இரண்டு லொறிகள் ஈரற்பெரிய குள தடைமுகாமில் இராணுவ பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டன.

இரண்டு சாரதிகள் உட்பட லொறிகளில் வந்த 9 பேர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர்.

நாலாயிரம் பென்டோர்ச் பற்றரிகள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பன இவற்றில் அடங்கும் என்றும் — 'விவா' பால்மா போத்தல்களுக்குள் பற்றரிகள் அடைத்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# அம்பாறையில் குடியேறும் தமிழர்களுக்கு பயமுறுத்தல்

கொழும்பு, டிச. 18

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திராய்க்கேணி கிராமத்தில் மீளக் குடியேற்றப் படவுள்ள தமிழ் அகதிகளை அயல் கிராமம் ஒன்றைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் கோஷ்டி ஒன்று பயமுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீளக்குடியேற்றப்பட முன் தமது கிராமத்தைப் பார்வையிடச் சென்ற தமிழர்களே இவ்வாறு பயமுறுத்தப்பட்டனர்.

திராய்க்கேணி மக்கள் 1990 ஆம் ஆண்டு வன்செயல்களால் இடம்பெயர்ந்து திருக்கோயில், காரைதீவு ஆகிய பகுதிகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். (த)

## யாழ். மாவட்டத்துக்கான

# பொதுசன உதவிப் பணம் 1994 இல் மேலும் குறைப்பு

அரியாலை டிச 17

1994ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திற்கான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகள் மேலும் குறைக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பொதுசன மாதாந்த உதவி கொடுப்பனவுக்கு என வருடம் ஒன்றிற்கு 1,255 லட்சம் ரூபா நிதி தேவை.

ஆனால் அடுத்த ஆண்டுக்கென யாழ். மாவட்டத்திற்கு 981 லட்சம் ரூபா நிதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

யாழ். மாவட்டத்தில் பொதுசன மாதாந்த உதவி பெறுவோரை உடனடியாக மீளாய்வு செய்யுமாறும் வட-கிழக்கு மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களம் யாழ். செயலக சமூக சேவைகள் பகுதிக்கு அறிவித்துள்ளது.

இதனால் யாழ். மாவட்டத்தில் பொதுசன மாதாந்த கொடுப்பனவு பெறுவோரின் எண்ணிக்கை அடுத்த ஜனவரி முதல் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

**வனமின்றிப் போனால்-நம் இனமின்றிப் போகும்**

## நேர்முகப் பரீட்சை

கோப்பாய் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் அடுத்த வருடத்திற்கான பயிற்சி ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். (த-111)

## ஆலயங்களில்

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம், ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை விநாயக சஷ்டி விரத பூசை நடைபெறும்.

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை கஜமுகாசுர சம்ஹாரம் உற்சவம் நடைபெறும். (த-351)

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கஜமுகாசுர சம்ஹார உற்சவமும், நாளை ஞாயிற்றுக்கிழமை விநாயக சஷ்டி உற்சவமும் நடைபெறும்

## இன்று

யாழ். போதனா வைத்தியசாலை தொண்டர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். (த)

## சிவலிங்கம் விடுதலையானார்

சென்னை, டிச 18

கோயம்புத்தூரை வசிப்பிடமாகக் கொண்ட மனித உரிமைகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. இரா சிவலிங்கம் (வயது 61) நான்கு மாத சிறைவாசத்தின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கையில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் அதிபராகவும், கல்விஅதிகாரியாகவும், பிரபல சட்டத்தரணியாகவும், விளங்கிய இந்திய வம்சாவழியினரான இவர், இலங்கையில் நடந்த இனக்கலவரத்தை அடுத்து 1983 இல் குடும்பத்துடன் இந்தியா வந்து குடியேறினார் (ஒ-எ)

**உன்னத ..**

(1 ஆம் பகக்த் தொடர்ச்சி)

தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே நாம் தாக்குதல் திட்டங்களை வகுக்க முடிகிறது. தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகிறது. வேவுப் பிரிவைச் சேர்ந்த போராளிகளின் துணிகரச் சாதனைகள் மூலமே நாம் பூநகரிப் பெருஞ் சமரில் வெற்றியீட்ட முடிந்தது.

*ஆபத்து நிறைந்த பணி*

வேவுப் பிரிவைச் சேர்ந்த போராளிகள் மிகவும் நிதானமாக, சாதுரியமாகச் செயற்பட வேண்டியுள்ளது. அவர்களது ஒவ்வொரு அசைவும் ஆபத்து நிறைந்தது. மிகவும் துணிவுடன் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் இந்தப் பணியின் போது எத்தனையோ போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கிறார்கள். சிலர் தாம் புரிந்த வீர சாதனைகளுக்கு பரிசு பெறுவதற்கு முன்னரே புதிய தாக்குதலுக்கான வேவுப் பணியில் ஈடுபட்டுத் தமது உயிரை ஈகம் செய்துள்ளனர். உன்னதமான இந்த அர்ப்பணிப்புகளின் பயனாகவே விடுதலைப் போரில் நாம் பெரும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடிகிறது — என்றார்.

தலைவர் தொடர்ந்து பேசுகையில், கடும் சண்டை நடைபெறும் வேளையில், களத்தில் இறங்கி, எத்தனையோ ஆபத்துக்கள் மத்தியிலும் வீடியோ, புகைப்படம் எடுத்துள்ள போராளிகளின் துணிவையும் மெச்சினார், இந்தப் பணியின் போது சிலர் வீரச்சாவு எய்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

**தமிழ் அகதியின் ..**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின் கொமாண்டன்ற், திருமலை செவன் ஐலண்ட் இராணுவ முகாம் கொமாண்டன்ற், திருமலை சிறைச்சாலை அத்தியட்சகர், களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

முறைப்பாட்டுக்காரர் தமது மனுவில்,

''பச்சனூர் அகதி முகாமில் தங்கியிருந்த என்னை 1 - 1 - 1992 அன்று கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமைச் சேர்ந்த சில படையினர் கூட்டிச் சென்றனர். அங்கு அவர்கள் என்னைக் கட்டி வைத்து மூக்கினுள்ளும் வாய்க்குள்ளும் பெற்றோலை ஊற்றினர். பின்னர் வயர் கம்பியினாலும் தடிகளாலும் தாக்கினார்கள். 6 - 1 - 1992 இல் ஜி. பி. எஸ். இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கும் என்னை சித்திரவதை செய்தார்கள்''— என்று குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. (த-எ)

## 5 ஆம் ஆண்டு புலமை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்கொண்டு கிடைத்த முடிவுகளின்படி யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தோற்றிச் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ சென். ஜோன்ஸ் பொஸ்கோ | — 67 |
| ★ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை | — 43 |
| ★ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | — 29 |
| ★ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | — 34 |
| ★ உடுவில் மகளிர் கல்லூரி | — 29 |
| ★ சண்டிலிப்பாய் இந்து வி. | — 09 |
| ★ ஏழாலை அ. மி. த. க. பாடசாலை | — 06 |
| ★ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வி. | — 06 |
| ★ சுதுமலை சின்மிய பாரதி வி. | — 05 |
| ★ இராமநாதன் கல்லூரி | — 04 |
| ★ சண்டிலிப்பாய் த. க. பாடசாலை | — 03 |
| ★ மானிப்பாய் சென். ஆன்ஸ் | — 03 |
| ★ உரும்பராய் சைவத் தமிழ் வி. | — 12 |
| ★ நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வி. | — 10 |
| ★ நீர்வேலி சி. சி. த. க. | — 06 |
| ★ அச்சுவேலி ம. வி. | — 03 |
| ★ அச்சுவேலி சென். திரேசா | — 06 |
| ★ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வி. | — 03 |
| ★ கோப்பாய் சரவணபவானந்தா | — 04 |
| ★ கோப்பாய் நாவலர் | — 08 |
| ★ கோப்பாய் ம. வி. | — 01 |
| ★ கந்தரோடை தமிழ் கந்தையா | — 06 |
| ★ சண்டிலிப்பாய் இந்து ம. வி. | — 09 |
| ★ காரைநகர் தியாகராஜா ம. வி. | — 03 |
| ★ யாழ்ப்பாணக் கல்லூரி | — 12 |
| ★ தெல்லிப்பழை தந்தை செல்வா வி. | — 06 |
| ★ சுழிபுரம் ஐ. சை. வி. | — 03 |
| ★ தெல்லிப்பழை மகாஜனா | — 11 |
| ★ காரைநகர் யாழ்ரன் | — 09 |
| ★ [illegible] | — 06 |
| ★ கல்வியங்காடு காசிப்பிள்ளை வி. | — 06 |
| ★ [illegible] வி. | — 14 |

(அ-3-162-152-89-77)

# பல்கலைக்கு நிதி ஒதுக்கீடு; கல்வி அமைச்சருடன் பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் சம்பந்தமாக பல்கலைக்கழக உப வேந்தர் துரைராஜாவுக்கும், உயர் கல்வி அமைச்சர் திரு. லொக்கு பண்டாராவுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

கொழும்பு சென்றிருந்த உப வேந்தருடன் அமைச்சர் கலந்துரையாடிய சமயம், யாழ். பல்கலைக்கழகத்துக்கான நிதி ஒதுக்கீடு, செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

கிழக்கிலங்கை பல்கலைக்கழக உபவேந்தரும் அப்பேச்சுக்களில் கலந்துகொண்டதுடன், தமது பல்கலைக்கழகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் எடுத்து விளக்கினர். (த-3)

யாழ். இந்துக்கல்லூரி
**ஆண்டு ஆறு அனுமதி-1994**

1993 ஆகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் பிரகாரம் மாணவர்களுக்கு எமது கல்லூரியில் ஆண்டு 6 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இவ்வனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தை கல்லூரி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 25-12-1993.

— அதிபர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
18-12-1993. (சி-6729)

எடிசன் அக்கடமி
(யாழ். இந்து அருகில்)
K. K. S வீதி, யாழ்.
**SPOKEN ENGLISH BY BRITTO**
ஆரம்பம்
19 - 12 - 93 ஞாயிறு பி. ப 2 மணி
TIME TABLE
வியா - வெள் 4 30 மணி
(சி/6731)

மக்கள் வங்கி
எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான
**பயிற்சி வகுப்புக்கள்**
ஆரம்பம்: 20 - 12 - 1993
மாலை நேரம் (3 மணி)
ஆசிரியர்:
அ. குமாரவேல்
★ பயிற்சி பரீட்சையும் நடத்தப்படும்.
★ 40 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்.
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி-6722]

**வாழ்த்துகின்றோம்**
இன்று 18 - 12 - 1993 இல்
பவளவிழாக் காணும்



"சேவா திலகம்"
உயர்திரு க. முருகேசு அவர்கள்
(இளைப்பாறிய அதிபர் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, புத்தூர் ஸ்ரீ விஷ்ணுவித்தியாலயம்)
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
- பழைய மாணவர்கள்.
அல்வாய், புத்தூர். (28483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
01 – 07 – 1948

அமரத்துவம்:
18 – 11 – 1993

## அமரர் ஆதிசிவம் சிவகுமாரன்

(லக்சுமி ஸ்ரோர்ஸ், வர்த்தகரும், மில் உரிமையாளரும்)

18-11-1993 இல் அமரத்துவம் அடைந்த அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு, எமது துயரத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (18-12-1993) நடைபெறும் அந்தியேட்டியிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்.
தாய், மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (6750)

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி சண்முகநாதன்

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி சண்முகநாதன் (ஆசிரியர் விபாவில் சைவபரிபாலன சபை வித்தியாசாலை காரைநகர், தற்பொழுது சாந்த சிற்றம்பல வித்தியாசாலை பனிப்புலம்) 17-12-93 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும், பாலசிறீமணி, சிவநாதன் ஆகியோரின் தந்தையும் காலம் சென்ற கருங்காலி உடையார் கந்தசாமி, மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், களபூமி காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்புக்காத்து K. K சுப்பிரமணியம், சுந்தரம்மா ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-12-93 வெள்ளிக்கிழமை கோப்பய்மணல் மயானத்தில் நடைபெற்றன, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
சிவமணி
(மனைவி)

34, றக்கா ஒழுங்கை
சுண்டிக்குளி. (28500)

## திருமதி ஆயிலியம் சரவணமுத்து

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி ஆயிலியம் சரவணமுத்து அவர்கள் 15-12-1993 புதன்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

இவர் கோண்டாவில் ''ஸ்ரீ குமரன் அரிசி ஆலை'' உரிமையாளர் திரு. க. வே. சரவணமுத்துவின் (ஆசைப்பிள்ளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருவருட்கரசி, தவஅருட்கரசி, சிவகுமாரன், ஞானஅருட்கரசி (ஜேர்மனி), திருஞானசம்பந்தன் (சுவிற்சர்லாந்து), ஸ்ரீகணேசன் (ஜேர்மனி), நடராசபிரபு ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாகரன், கந்தசாமி, சிவபாலன் (ஜேர்மனி), மின்னல்கொடி ஆகியோரின் அன்பு மாமியாரும், திபாகரன், பிரபாகரன், கோபிதா, தக்ஷாயனி, றாம்கீ (ஜேர்மனி), பாலமயூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (18-12-1993) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
க. வே. சரவணமுத்து
(ஆசைப்பிள்ளை)

''ஸ்ரீ குமரன் மில்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (28496)

## அன்னம்மா கந்தையா

அன்னம்மா கந்தையா 17-12-93 இல் காலமாகிவிட்டார். அன்னார் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தோப்பு அச்சுவேலி கணபதிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், காலம்சென்ற தியாகராஜா (M. L. T), தங்கராஜா (P. H. I), நேசமலர், தேவராஜா (Canada), மங்கையர்க்கரசி, ஞானேஸ்வரி, அற்புதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனகலோஜினி, சறோஜினி, காலம்சென்ற திருச்செல்வம் (முன்னாள் கணக்காளர்), நாகேஸ்வரி (Canada), சின்னத்துரை இராமச்சந்திரன் (Swiss), காலம்சென்ற ஜீவரட்ணம் (Co-op Manager) ஆகியோரின் அன்பு மாமியாரும், தியாகசீலி (Doctor Kandy), தயாசீலி (Swiss), சுபசீலி (Doctor Kandy), கௌரி, ரஞ்சன் (London), பஞ்சசீலி, குணசீலி, சத்தியசீலி, சுதர்சன், முகுந்தன் (Swiss), சுகன்யா, காலம்சென்ற ரவிமோகன், ரவிறஞ்சனா, ரவிராஜன், ரவிக்குமார், ரவிசங்கர், கங்கா (Canada), குகறஞ்சினி, குகறமணி, நந்தகுமார், சுபத்திரா, குமுதினி, அனுசியா, பிரபாஜினி, றஞ்சித்குமார், சுகந்தி, வளர்மதி, தயாளினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசன்திடல் சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலியில் நடைபெற்று பூதவுடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சிறுப்பிட்டி குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி ஞானேஸ்வரி இராமச்சந்திரன்
(மகள்)
(28501)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# சிறுபான்மை இன மக்களின் வாக்கைப் பெற சு.க. ஆர்வம்'

கொழும்பு, டிச. 18
சிறுபான்மை இன மக்களின் வாக்குகளை பெறுவதற்கான புதிய சிந்தனை பகிரங்கமாக சுதந்திரக்கட்சியில் ஏற்பட்டுள்ளது என சண்டே ரைம்ஸின் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

'இவ் விஷயத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு விஷயத்தில் கட்சியின் நிலையை மீள் பரிசிலனை செய்யவும் தயாராக இருப்பதாக திருமதி சந்திரிக்கா கூறிவருகிறார்.

மாத்தறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி மங்கள சமரவீர அண்மையில் நாடாளுமன்ற 'லொபி'யில் வைத்து சக சுதந்திரக்கட்சி எம். பிக்களிடம், ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று சமஷ்டி அரசமைப்புக்கு ஆதரவாக தாம் பிரசாரம் செய்யப் போவதாகவும் கூறினார்.

''தொண்டமான் எங்கே இருக்கிறார் என்பதல்ல மக்களின் அக்கறை. சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அமைய வேண்டும் என்பதுதான் மக்களின் அக்கறையாகும் என்று சமரவீரா தெரிவித்தார்

தொண்டமான் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தால் நான் கைகளை மட்டுமல்ல இரு கால்களையும் சேர்த்து உயர்த்துவேன்'' என்று சமரவீர சக சு.க எம். பிக்களிடம் கூறியிருக்கிறார்.

எப்படியிருப்பினும் - குறைந்த பட்சம் ஜனாதிபதி தேர்தல் முடியும் வரையாகிலும் சிறுபான்மையினருக்கு ஆதரவான தனது புதிய கொள்கையை சுதந்திரக்கட்சி கைவிடாது என்று தெரிகிறது

இதன் காரணமாக கட்சிக்குள் எழும் விரோத உணர்வை எப்படித் தலைமைப் பீடம் சமாளிக்கப்போகிறது என்பது இனித்தான் தெரியவரும்'— இப்படி சண்டே ரைம்ஸின் அரசியல் செய்தியாளர் எழுதியிருக்கிறார். (த-எ)

## காஞ்சிபுரத்தில் பிரபா படங்கள்!

சென்னை, டிச 18
காஞ்சிபுரம் நகரில் வை. கோபாலசாமி கலந்து கொண்ட பொதுக்கூட்டத்திற்கு அருகில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் படங்களை விற்றுக் கொண்டிருந்த இருவரை பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## காந்தியின் பூட்டன் சுட்டுக் கொலை

ஜோஹனஸ்பேர்க், டிச. 18
மகாத்மா காந்தியின் பூட்டனான குஷ் ரம்கோபின் (29 வயது) என்பவர் நேற்று தென்னாபிரிக்காவில் டேர்பன் நகரில் அவரது இல்லத்தில் வைத்து, ஆயுதபாணிகள் சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் காந்தியின் பேத்தியான ஈலா காந்தியின் புதல்வர் ஆவார். நேட்டால் பிராந்தியத்தில் இவர் தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவர் என்று கூறப்பட்டது.

கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. (ஒ-6)

## பேராதனை பல்கலைக்கழக மாணவர் பட்டியல்

யாழ்ப்பாணம், டிச. 18
பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர் பட்டியலை யாழ் பல்கலைக்கழக உப—வேந்தர் அலுவலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக உப—வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவான மாணவர் விவரங்கள் அடங்கிய பட்டியலை எடுத்து வந்துள்ளார். (ஓ-3)

## ஆயருக்கு பொது வரவேற்பு

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை ஞாயிறு காலை 7. மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கு கரவெட்டி பங்கு மக்களால் பொது வரவேற்பளிக்கப்படவுள்ளது அதைத் தொடர்ந்து ஆயர் அவர்களால் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, உறுதி பூசுதலும் வழங்கப்படவுள்ளது (ஒ-173)

## நாளை

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். (த)


எமது வெளியீடுகள்

✲ மம்முட்டி, கனகா
கிளிப் பேச்சு கேட்கவா
✲ கார்த்திக், குஷ்பு
காத்திருக்க நேரமில்லை
✲ அர்ஜுன், குஷ்பு
ரோஜாவை கிள்ளாதே
✲ ஜெயராம், குஷ்பு
புருஷ லட்சணம்
✲ பிரபு, பானுப்பிரியா
உழவன்
✲ சத்தியராஜ், கௌதமி
ஏர்போர்ட்

சுப்பர்ஸோ வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6738)



நவகைடன்ஸ்
யாழ்ப்பாணம்
94 A/L
கணித விஞ்ஞானப்
பகல் நேர வகுப்பு
செவ்வாய், வியாழன்
காலை 10 - 00 மணி
நடைபெறுகின்றன.
(சி/6304)



மாருதி வீடியோ விஷனின்

புதிய வெளியீடுகள்
உழவன் ★ பிரபு ★ பானுப்பிரியா ★ சுஜாதா ★ செந்தில்
ரோஜாவை கிள்ளாதே ★ அர்ஜுன் ★ குஷ்பு ★ கவுண்டமணி ★ செந்தில்
ஏர்போர்ட் ★ சத்தியராஜ் ★ கவுதமி ★ செந்தில்
காத்திருக்க நேரமில்லை ★ கார்த்திக் ★ குஷ்பு ★ கவுண்டமணி
புருஷ லட்சணம் ★ அபிமான நட்சத்திரம்
யார் யாருக்கு மாப்பிள்ளை ★ அபிமான நட்சத்திரம்

குறிப்பு
குறித்த படங்கள் தணிக்கைக் குழுவின் பரிசிலனைக்கு பின்னரே விநியோகிக்கப்படும்.
(28493)



புதிய
விஞ்ஞான பீட
மாணவர்களுக்கான
வகுப்புக்கள்
1992/93
கல்வியாண்டு

மேற்குறித்த மாணவர்களுக்கு, 20-12-1993 இல் ஆரம்பமாகவிருந்த வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன. ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

• பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
(சி-6732)



"GREEN FOCUS"
REGIONAL ENVIRONMENT PROGRAMME

To team up in Planning and Implementing 'Projects', as a component of Global Programme, incorporating 'Agenda 21' of UNCED (Earth Summit '92) with the assistance of GEF - World Bank, we are soliciting applications for nominating as 'Area Focal Points' in the environmental continent of Shri Lanka in the Region of South - East Asia.

Applications are entertained from competent professionals with relevant advanced University degrees and / or from relevant and competent NGOS.

Local applications close on 30 December 1993, and are received by Ordinary post at C/o. P. O. Box: 381, Colombo.

DR. NAGULES KATHIRGAMANATHAN
REGIONAL FOCAL POINT
(SOUTH - EAST ASIA)
EARTH COUNCIL

10 December 1993
EC/SEA/N/93
(C-6726)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தத் தேர்தலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டி. எம் ஜயரத்தினா தெரிவித்தார்.

தனித்தே போட்டியிட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் எம். பிக்கள் சிலர் கோரியிருந்தாலும் — பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கொடியின் கீழ் போட்டியிடுவது என்று சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடம் முடிவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் பொது வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் அவர் கூறினார். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா ஆச்சிப்பிள்ளை

(வேலணை !)

செல்லையா ஆச்சிப்பிள்ளை வேலணையில் 02-12-93 இல் காலமானார். அன்னார் காலம்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், திருமகள், நடராசா, செல்வி நாமகள், காலம் சென்ற கருணாகரனின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை, கனகாம்பிகையின் மாமியாரும், அருட்செல்வி, சிவநாதன் (தபாலகம் வேலணை), பிரணவநாதன், அருள்வாணியின் அன்புப் பேர்த்தியும், தசாகன், தசானுஷனின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரது மறைவினைக் குறித்து பிரம்படி லேன், கொக்குவிலில் இன்று சனிக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. நடராசா (மகன்)
த. சிவநாதன் (பேரன்)

பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (28499)

## சின்னையா இலட்சுமி

மானிப்பாயைச் சேர்ந்த சின்னையா இலட்சுமி காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சி. மார்க்கண்டு J. P. (அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர், (ஸ்ரீமுருகன் அருள் நிலைய சாமியார்), சி. இராசு (ஓய்வுபெற்றவர் - C. T. B) காலம்சென்ற பொ. இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. கந்தையா, சி. துரை, காலம்சென்ற மாணிக்கம், சுந்தரம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், வடிவம்மா, அன்னப்பிள்ளை, பொன்னார் ஆகியோரின் அன்பு மாமியாரும், இரஞ்சினிதேவி, தர்மசீலன் (ஜேர்மனி), மா. மனோகரன் (மனோ அம்பிஸ் பான்சி குட்ஸ்), மா. யமுனா, மா. சிறிகரன் (ஜேர்மனி), சி. றவி, சி. ஜெயா, சி. பாபு (ஜேர்மனி), வி விசி (கொழும்பு), நங்கி, றஜிதா, கவிதா, விஜயராஜா (கனடா), லோகராசா ((கொழும்பு), கமலாதேவி, கோகிலாதேவி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-12-93) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி மார்க்கண்டு (சாமியார்) மகன்
மா மனோகரன் (பேரன்)

(6860)

## பாலர் சங்கரப்பிள்ளை

(செல்லப்பா)

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பன்னாலையில் வசித்தவருமான சங்கரப்பிள்ளை கைதடி வடக்கு கொத்தங்கூடல் இல்லத்தில் 17. 12. 93 அன்று காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கைதடி கிழக்கு அமரர் மானார் சந்திரசேகரத்தின் அன்புத் தம்பியும், சிவசுப்பிரமணியம் (பெரியதம்பி), சவுந்தரநாயகி (டென்மார்க்), வரதராஜப்பெருமாள் (சின்னத்தம்பி), பூரணலிங்கம், சோதிமலர், பத்மநாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும் சந்திரலேகா, தங்கம், யோகராணி, விநாயகமூர்த்தி (சவுதி), யோகரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18. 12. 93) சனிக்கிழமை மு. ப 11. 00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக ஊற்றல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பிள்ளைகள்

கைதடி வடக்கு (6751)

திருமதி

## அன்னப்பிள்ளை பசுபதிப்பிள்ளை

வேலணை கிழக்கு, 1 ஆம் வட்டாரத்தை (தாழிபுலம்) சேர்ந்தவரும், தற்பொழுது கொய்யாத்தோட்டத்தில் வசித்தவருமாகிய திருமதி அன்னப்பிள்ளை பசுபதிப்பிள்ளை 17-12-1993 இல் காலமாகிவிட்டார்.

இவர் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு - பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவயோகம் (குணம்), திலகவதி, அரசரெத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர் பிராந்திய அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்.), இராசரெத்தினம் (பிரதீபா லொறி உரிமையாளர்), சிவரெத்தினம் (பிரான்ஸ்), (முன்னாள் வே. ப. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்), தனலெட்சுமி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமசாமி, இராசரெத்தினம், திருமதி ஜெயா அரசரெத்தினம், திருமதி இரத்தினம், இராசரெத்தினம், லோகநாதன், திருமதி மணி சிவரெத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பத்மாவதி (ரதி), பத்மநாதன் (பிரான்ஸ்), சிறிதரன் (கஜந்தன் ஸ்ரோர், மணிப்புரி), லோகநாதன் (சுவிஸ்)), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், சதீஸ் (பிரான்ஸ்), சபேஸ், ரஜீவன், காண்டீபன், செந்தூரன் பிரதீபா, பிரசாந், பிரமதுரா, தர்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், செல்லப்பா, காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 31, புது வீதி, கொய்யாத்தோட்ட இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக இன்று (18 - 12 - 1993) காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ப. இராசரெத்தினம்
(மகன்)

31, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (28497)